



- வாழ்வோம்




## நீங்கள் கையெழுத்திட்டு விட்டீர்களா?

தமிழ்நாடு மட்டுமே உரத்தக் குரலில் முழங்கிவந்த `நீட்' எதிர்ப்பு, இப்போது நாடு தழுவிய இயக்கமாக மாறிக்கொண்டிருக்கிறது. அதற்குக் காரணம், இந்த ஆண்டு `நீட்' தேர்வில் நடந்த குளறுபடிகளும், அதனைத் தொடர்ந்து ஜூன், ஜூலை ஆகிய 2 மாதங்களில் மட்டும், நாடு முழுவதும் `நீட்' தேர்வு அச்சத்தால் பத்துக்கும் மேற்பட்ட மாணவர்கள் தற்கொலை செய்துகொண்டதும்தான். மருத்துவர்களாக வலம் வரவேண்டிய மாணவச் செல்வங்களின் உயிரைப் பறிக்கும் ஆட்கொல்லிக் கருவியாக `நீட்' தகுதித்தேர்வு மாறிவிட்டது என்பதை, இப்போது நாடு முழுவதும் உணரத் தொடங்கிவிட்டனர்.

`நீட்' தேர்வுக்கு எதிராக, டெல்லியில் மிகப்பெரிய அளவில் நடைபெற்ற போராட்டத்தின் காரணமாக, ஒன்றியக் கல்வித் துறை அமைச்சர் தர்மேந்திர பிரதான் பதவி விலகும் அளவுக்கு எதிர்ப்பு முற்றியது. தர்மேந்திர பிரதான் பதவி விலகினாலும், `நீட்டை ஒழிக்காமல் இந்தக் குளறுபடிகளைப் போக்க முடியாது' எனத் தமிழ்நாட்டு இளைஞர்கள் தொடர்ந்து பல்வேறு வகைகளிலும் போராடிவருகின்றனர்.

'நீட் எதிர்ப்புக் கூட்டியக்கம் – தமிழ்நாடு' என்ற பெயரில் தொடர்ந்து போராடிய மாணவர்கள், பெரியார் பிறந்தநாளன்று, இந்திய அளவிலான மாபெரும் ஆன்லைன் கையெழுத்து இயக்கத்தைத் தொடங்கியுள்ளனர். பெரியார் திடலில், திராவிடர் கழகத் தலைவர் ஆசிரியர் கி.வீரமணி அவர்கள், இந்தக் கையெழுத்து இயக்கத்தைத் தொடங்கிவைத்தார். ``மாணவர்களின் கல்வி உரிமை பாதுகாக்கப்பட, சமூக நீதி நிலைநாட்டப்பட நீட்டை ஒழிக்க வேண்டும்! பெரியார் மண்ணிலிருந்து எழும், `நீட்' வேண்டாம்! `நீட்' ஒழியட்டும்! #BANNEET என்ற முழக்கத்தை இந்தியா முழுவதும் கொண்டுசெல்வோம்” என்று இந்தக் கையெழுத்து இயக்கத்தை நடத்திவருகின்றனர்.

ஆன்லைனில் கையெழுத்திட மேலே உள்ள QRCODE-ஐ ஸ்கேன் செய்யவும். அனிதா விட்டுச்சென்ற போராட்டத்தைத் தொடர்ந்து முன்னெடுப்போம்!

# காலத்தின் குரல்

## பா.ஜ.க.வை எதிர்ப்பது எப்படி?

தமிழ்நாட்டு அரசியலில், இப்போது பல 'வேடிக்கை மற்றும் விபரீத அரசியல் பிரமுகர்கள்' அவதரித்திருக்கிறார்கள். சொல்லப்போனால், அவர்களை அரசியல் விபத்துகள் என்று சொல்வதே பொருத்தமாக இருக்கும். அவர்களில், இந்திய தேசிய காங்கிரஸின் பங்களிப்பாக அவதரித்திருப்பவர், திருவாளர் மாணிக் தாகூர் என்கிற மாணிக்கம் தாகூர். இவர், திடீரென ஒரு நாள் விழித்துக்கொண்டு, 'ஏன் தமிழ்நாட்டில் யாருமே பா.ஜ.க.வை விமர்சனம் செய்வதே இல்லை?' என விசனப்பட்டிருக்கிறார். இந்திய அரசியலிலேயே முதல் முறையாக, காங்கிரஸ் கட்சி பா.ஜ.க.வுடன், அதன் கள்ளக்குழந்தையான த.வெ.க.வுடன் கூட்டணி வைத்திருக்கும் ஒரே மாநிலம், தமிழ்நாடு. அதன் மாநிலக் குழுத்தலைவர் இப்படிப் பேசுவதுதான் வேடிக்கையாக இருக்கிறது.



கடந்த 2026 தேர்தல் களத்தை முடிந்தவரை குழப்பமாக்கி, த.வெ.க. என்ற விபரீத / வினோத அரசியல் கட்சியை வெற்றிபெற வைத்து, அதை ஆட்சியிலும் அமர்த்தி அழகுபார்த்த ராகுலின் தளபதிகள் இருவரில், இரண்டாம் இடத்தைப் பிடித்தவராகிய மாணிக்கம் தாகூர், ஏதோ தீவிரமான 'மறதிநோய்' வயப்பட்டு இருக்கிறார் என்றே தோன்றுகிறது. ராகுலின் தளபதிகளில் முதலாமவர் யார் என்பது ஊருக்கே தெரியும். காங்கிரஸ் கட்சியின் நெடுநாள் தலைவர்களாக அறியப்பட்டவர்களுக்குக்கூட யார் என்று தெரியாத பிரவீன் சக்கரவர்த்தி என்ற 'சூட்சுமதாரி', தமிழ்நாட்டின் தேர்தல் களத்தில் பெரும் குளறுபடியைச் செய்ய முடிந்தது என்பதே விபரீதத்தின் உச்சம்.

ராகுலின் நம்பிக்கைக்குரிய அறிவுரையாளராக அறியப்பட்டாலும், பிரவீன் சக்கரவர்த்தியும் நம்ம ஊர் ஆதவ் அர்ஜூனா போல எங்கிருந்தோ இழுக்கப்படும் கயிறுகளுக்கு அசையும் அதிசயப் பிறவியாகவே தெரிகிறார். அந்தக் கயிறுகள்- நாக்பூர், குஜராத் மற்றும் கண்டங்கள் கடந்த மையங்களைக் கட்டுப்படுத்துபவை. இந்துத்துவ மதவாதம், அதைவிட கூடுதலாகப் பெரு முதலாளிகளின் வேட்டைக்காடாக இந்தியத் துணைக்கண்டத்தை அடிமைப் படுத்தத் துடிக்கும் சக்திகளே அவை. இவர்களின் 'திராவிட அரசியல் ஒழிப்பு' என்ற செயல்திட்டத்தின் ஒரு வடிவமே, தமிழக வெற்றிக் கழகம்.

சரி, இப்போது மாணிக் தாகூர் மனத்தை ஆட்கொண்டிருக்கும் ஐயப்பாட்டைப் பார்ப்போம். இப்போது, விஜய் அவர்களின் அமைச்சரவையில் இரண்டு காங்கிரஸ் அமைச்சர்கள். அறுபது ஆண்டுகளுக்குப் பிறகு, அவர்களின் கனவு நனவாகியிருப்பதாகப் பெருமிதம் கொள்கிறார்கள், காங்கிரஸ் பெருமக்கள். நல்லது. இதுவரையிலான த.வெ.க. அரசின் கொள்கை முடிவுகள், திட்டங்கள் எல்லாமே காங்கிரஸ் பங்கேற்கும் அமைச்சர்களின் கூட்டு நடவடிக்கை என்பதே ஆட்சிமுறையின் வடிவம். த.வெ.க.விற்கென்று தனித்த கொள்கை, நிலைப்பாடுகள் அறவே இல்லை எனும்போது, இந்த அரசு 'மோடி சர்க்கார்' இட்ட கட்டளைகளைச் சிரமேற்கொண்டு செயல்படுத்திவருகிறது. அந்தத் திட்டங்களிலோ அல்லது ஒன்றிய அரசுக்கு அடிபணிந்து நிறைவேற்றிவரும் போக்குக்கு, காங்கிரஸ் எல்லா வகையிலும் ஒப்புதல் அளித்துவருகிறது.

இந்திய அரசியல் களத்தில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் காலங்காலமான போராட்டம், 'ஒன்றிய அரசின் மேலாண்மையை நிறுவும் அதிகார பீடமாக ஆளுநர் இருக்கக் கூடாது' என்பதே. ஆளுநரே கூடாது எனும் அரசியல்தான் மாநில உரிமைப்போரின் அடிப்படைக் கோட்பாடு. இந்த நிலைப்பாட்டை, அதன் தோற்றுவாய் காலத்தில் இருந்து தொடர்வது, திராவிட முன்னேற்றக் கழகம்.

இந்திய அரசியல் அரங்கிலேயே உரிமைகளுக்காகத் தொடர்ந்து சட்டப் போராட்டங்களை நிகழ்த்திவரும் தி.மு.க., கடந்த ஐந்து ஆண்டுகளில், தமிழ்நாடு அரசின் பல்கலைக் கழகங்களில் துணைவேந்தர் நியமனத்திற்கு ஆளுநர் அங்கீகாரம் தேவையில்லை என்ற உச்ச நீதிமன்றத்தின் ஆணையைப் பெற்றது. ஆனாலும், அதனை முற்றிலுமாகச் செயல்படுத்துவதற்கு முன், ஆட்சிமாற்றம் நிகழ்ந்துவிட்டது. இப்போது காங்கிரஸ் அமைச்சர், 'ஆளுநரே வேந்தராகத் தொடரலாம்' என வேரில் வெந்நீர் ஊற்றியிருக்கிறார். இதுதான் மாபெரும் துரோகம்.



முதலில், பா.ஜ.க. எதிர்ப்பு என்பதை என்னவாக நீங்கள் புரிந்துகொண்டிருக்கிறீர்கள்? அது, ஒரு போதும் உங்களுக்குப் புரியாது. காங்கிரஸ் ஒன்றியத்தில் குவித்த அதிகாரச் சட்டங்களே இப்போது பா.ஜ.க.வின் அராஜகங்களுக்கான ராஜபாட்டை.

**வீ.மா.சுபகுணராஜன்** ■

தி.மு.க.வின், பா.ஜ.க. எதிர்ப்பு என்பது அவ்வளவு எளிதானது இல்லை. பா.ஜ.க.வின் மதவாதச் செயல்பாடுகள், திட்டங்கள் முறியடிக்கப்பட வேண்டியவைதான். ஆனால் அதையும் தாண்டி, இந்தியாவின் இன, மொழி, மத பன்மைத்துவம் காக்கப்பட வேண்டும். அதற்கான உத்தரவாதமான அடிப்படையாக, இந்தியா எனும் நாடு, இறையாண்மை மிக்க மாநிலங்களின் கூட்டமைப்பு என்பது ஐயத்துக்கு அப்பால் நிறுவப்பட வேண்டும்.

இந்த இடம், இந்திய தேசிய காங்கிரஸுக்கு ஒரு வழுக்கல் பாறை. தேசிய வாதம் என்ற புள்ளியில், பா.ஜ.க.வின் ஒற்றை இந்தியா, ஒரே அதிகார மையமான மத்திய அரசு என்ற கோட் பாட்டில், காங்கிரஸுக்கும் பெரிய மாறுபாடு இல்லை என்பது தெரியும். இந்தியா கூட்டணியிலும் தி.மு.க. கூட்டணியிலும் ராகுல் எங்களது பெரு நம்பிக்கைக்குரியவராக ஆனது, அவர் இந்தப் பன்மைத்துவம் என்ற கோட்பாட்டையும் மாநிலங்களின் உரிமை பறிபோகாத கூட்டாட்சி எனும் அரசியல் நிலைப்பாட்டையும் உறுதிபடப் பேசியதாக நாங்கள் நம்பியதே காரணம். ஆனால், அந்தக் கொள்கைகளில் அவர் ஆழமான பற்றோ, உறுதிப்பாடோ அற்றவர் என்பது இப்போது அம்பலமாகிவிட்டது.

ஒரு வகையில், அவரது உண்மை முகம் வெளிப்பட்டது வரவேற்கப்படவேண்டியதே. ஏனெனில், இந்தியா எனும் நாடு, தன்னாட்சி உரிமைபெற்ற மாநிலங்களின் கூட்டரசாக ஆக வேண்டுமெனில், அதற்கான தேர்தல் கூட்டணி, அந்தந்த மாநில உரிமைக்காகக் குரல் எழுப்பும் கட்சிகளின் ஒன்றிணைவில் மட்டுமே நிகழ முடியும். அந்த வகையான தேர்தல் கூட்டணியையே தி.மு.க. அமைக்க விரும்பும். அந்த அணியில், மிதமான மென் இந்துத்துவ மதவாதமும், மாநிலங்களின் உரிமை பற்றிய அக்கறையுமற்ற காங்கிரஸுக்கு அறவே இடமில்லை!

இறுதியாக ஒன்றைத் தெரிந்துகொள்ளுங்கள் மாணிக் தாகூர், தி.மு.க. நாள்தோறும் பா.ஜ.க. எதிர்ப்புப் போராட்டம் நடத்திக் கொண்டுதான் இருக்கிறது. என்ன அது, நீங்கள் ஆவேசமாக உருவாக்கிய, த.வெ.க. எனும் பா.ஜ.க.வின் 'கைப்பாவை' யோடு நடக்கிறது என்பதுதான் வேதனை. அந்தக் கொள்கையற்ற கூட்டத்தின் ஆட்சியில், அதிகாரத்தில் பங்கேற்றுக்கொண்டு, அவர்களின் மக்கள் விரோத, துரோக, பா.ஜ.க. ஆதரவுக் கொள்கைகளுக்குத் துணைபோய்க்கொண்டு, யாரிடம் பா.ஜ.க. எதிர்ப்பைக் காண எண்ணுகிறீர்கள்? இனியும் உங்கள் மாய்மாலம் இந்த மண்ணில் செல்லாது. ■

# ஃப்ளாஷ்பேக்



## தலைவரின் வாழ்த்து!

2015-ஆம் ஆண்டு, கோவை மாநகர் மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளராக இருந்தபோது, முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களை, கோபாலபுரம் இல்லத்தில் சந்தித்து, தேர்தல் நிதி வழங்கினேன். அப்போது தலைவர், 'கழகப் பணியில் ஊக்கமுடன் செயல்பட வேண்டும்' என வாழ்த்தியது, எனக்குக் கிடைத்த பெரும்பேறு.



கோட்டை அப்பாஸ்

**– கோட்டை அப்பாஸ்,**
**மாநகர் மாவட்டக் கழகத் துணைச் செயலாளர்,**
**கோவை மாநகர் மாவட்டம்.**

இதுபோன்ற அரிய புகைப்படங்களை சிறு குறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம். அனுப்பவேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018
வாட்ஸ்அப் எண்: 82204-51520 மின்னஞ்சல்: murasolipaasarai@gmail.com

# தெரிந்து கொள்வோம்

**அன்பகம்**

**1964**

சென்னை அண்ணா சாலையில் தி.மு.க. தலைமை நிலையத்திற்குச் சொந்தமாகக் கட்டடம் ஒன்று வாங்கப்பட்டு, அதற்கு 'அன்பகம்' என்று பெயரிடப்பட்டது.




Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 044 - 45849900